உதயன்

விலை ரூபா 4-50

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 06 திங்கட்கிழமை (22-07-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 229

# புலிகள் அதிரடித் தாக்குதல்:

# முன்னேற முயன்ற படையணி

# சிதறிப் பிரிந்து சிக்குண்டது!

## மாட்டிக்கொண்ட சிப்பாய்களை மடக்கிப்பிடிக்க இரவிரவாக கடும்சமர்

யாழ்ப்பாணம், ஜூலை 22

வெற்றிலைக்கேணி — கட்டைக்காட்டுப் பகுதியில் தரை இறங்கி, ஆனையிறவு நோக்கி நாளாந்தம் நகர்ந்து கொண்டிருந்த ஸ்ரீலங்காப் படையினர் மீது, நேற்று மாலை விடுதலைப் புலிகள் பெரிய அளவில் அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தினர்!

அந்தத் தாக்குதலில் முன்னேறிச் சென்ற படை இரண்டாகச் சிதறிப் பிரிந்தது!! பிரிந்து சென்ற படை அணிகளில் ஒன்று புலிகளின் பிடியில் சிக்குண்டது!!!

இவ்வாறு மாட்டிக் கொண்டு திணறும் சிப்பாய்களை மடக்கிப் பிடிக்க விடுதலைப் புலிகள் நேற்று இரவிரவாக கடும் சமர் புரிந்து கொண்டிருந்தனர்.

நேற்றைய மோதல்கள் தொடர்பாக யுத்த முனையிலிருந்து கிடைத்த தகவல்கள் வருமாறு:-

கடந்தவாரம் வெற்றிலைக்கேணி — கட்டைக்காட்டுப் பகுதியில் தரையிறங்கிய படையினர் விடுதலைப் புலிகளின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் ஆனையிறவு நோக்கி மருதடிச் சந்தி வழியாக முன்னேறினர்.

நகர்ந்து செல்லும் வழியில் தங்கள் படை அணிகளை நிறுத்தி, நிலைப்படுத்தி அந்த இடங்களில் பாதுகாப்பைப் பலப்படுத்தியவாறு இராணுவத்தினர் முன்னேறினர்.

நேற்று வெற்றிலைக்கேணி கடலோரப் பகுதியிலிருந்து சுமார் இரண்டரை மைல் தூரத்தில் உள்ள புல்லாவெளி

[3 ஆம் பக்கம் பார்க்க]

## களத்தில் பல இடங்களில் சிப்பாய்களின் சடலங்கள்!

வெற்றிலைக்கேணி அருகே நேற்று மாலை புலிகளின் தாக்குதலில் படையினர் சிக்கிச் சிதறிப் பிரிந்த பகுதியில், பல இடங்களிலும் சிப்பாய்களின் சடலங்கள் சிதறிக் கிடக்கக் காணப்பட்டதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

நேற்று மாலை முதல் நடைபெற்று வரும் சண்டையில் ஸ்ரீலங்காப் படைக்கு பேரிழப்பு ஏற்பட்டிருப்பதாகவும்—

பெரும் எண்ணிக்கையான படையினர் உயிரிழந்திருப்பதாகவும் —

பல சிப்பாய்கள் காயமடைந்து செயல் இழந்துள்ளதாகவும் —

பெருமளவு ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகள் தரப்பிலும் சில போராளிகள் வீரமரணமடைந்தனர். (உ)

## மணலாறு தாக்குதலில் 15 படையினர் உயிரிழப்பு!

### ஆயுதங்களும் மீட்பு; நால்வர் வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 22

மணலாறு முகாமிலிருந்து நித்திகைக் குளம் நோக்கி வந்த படையினருடன் நேற்று முன்தினம் காலை முதல் மாலை வரை புலிகள் நடத்திய கடும் சண்டையில் 15 படையினர் உயிரிழந்தனர்.

அவர்களிடமிருந்து பல ஆயுதங்களைப் புலிகள் கைப்பற்றினர்.

இந்தச் சண்டையில் புலிகள் இயக்கப் போராளிகள் நால்வர் வீரமரணமடைந்தனர்.

ஷெல் தாக்குதல் நடத்தியவாறு முன்னேறிய சுமார் 300 படையினரை புலிகள் வழிமறித்துத் தாக்கினர்.

தொடர்ந்தும் படையினர் கடும் வானத் தாக்குதல்களின் மத்தியில் முன்னேற பகீரதப் பிரயத்தனம் செய்தனர். அவர்களுடன் காலை முதல் மாலை வரை புலிகள் கடும் சமர் புரிந்தனர்.

அதே சமயம் படுகாயமடைந்த படையினரை மீட்பதற்காக மாலை 4-30 மணியளவில் அப்பகுதியில் இறங்க முயன்ற ஹெலி மீதும் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இறுதியில் படையினர் பலத்த இழப்புகளுடன் மாலை 5-30 மணியளவில் பின்வாங்கிச் சென்றனர். [illegible] டன் [அ. செபமாலை — மன

[4ஆம் பக்கம் பார்க்க]

## கவசவாகனம் எரிந்து நாசம்!

யாழ்ப்பாணம், ஜூலை 22

நேற்று மாலை வெற்றிலைக்கேணியருகே விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் ஸ்ரீலங்காப் படையினரின் கவச வாகனம் ஒன்று சிக்கி நாசமானது.

சேதமுற்ற இந்தக் கவச வாகனம் நேற்று மாலை எரிந்து கொண்டிருந்ததாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இந்த கவச வாகனத்துடன் இப்பகுதியில் தரையிறக்கப்பட்ட ஐந்து கவச வாகனங்கள் புலிகளினால் அழிக்கப்பட்டு விட்டன என்பது குறிப்பிடத்தக்கது. [உ-3]

## படையினரின் 3 சடலங்கள் நேற்று யாழ்ப்பாணத்தில்!

நேற்று முன்தினமும் நேற்றுக் காலையிலும் வெற்றிலைக்கேணிப் பகுதியில் விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் உயிரிழந்த படையினர் மூவரின் சடலங்கள் நேற்று யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டன.

இந்தச் சடலங்களை ஸ்ரீலங்கா அரசிடம் ஒப்படைப்பதற்காக, செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுப் பிரதிநிதிகளிடம் விடுதலைப் புலிகள் இன்று அவற்றைக் கையளிக்கக்கூடும் என எதிர்பார்க்கப்பட்டது.

நேற்று முன்தினம் நடைபெற்ற சண்டையில் ஜி. பி. எம். ஜி. ரகத் துப்பாக்கி ஒன்றையும், ரி 56 ரகத் துப்பாக்கி ஒன்றையும் புலிகள் கைப்பற்றினர்.

நேற்றுக் காலை 9 மணியளவில் நடைபெற்ற சண்டையில் ரி 81 - 1 ரகத் துப்பாக்கி ஒன்றையும் புலிகள் மீட்டனர்.

நேற்று மாலைக்குப் பின்னர் மீட்கப்பட்ட சடலங்கள் மற்றும் ஆயுதங்கள் குறித்து தகவல் ஏதும் கிடைக்கவில்லை. [உ-3-5]

## கொழும்புப் பத்திரிகைகள் இராணுவம் மீது சீற்றம்!

கொழும்பு, ஜூலை 22

கடந்த 11 தினங்களாக ஆனையிறவு முகாமை விடுதலைப் புலிகள் தமது முற்றுகையில் வைத்திருப்பது குறித்து கொழும்புப் பத்திரிகைகள் பலவும் இராணுவத்தைக் கடுமையாக விமர்சித்துள்ளன.

''விடுதலைப் புலிகளுக்கு எதிரான மற்றைய தமிழ்க் குழுக்கள் ஆனையிறவு முகாமை விடுதலைப் புலிகள் முற்றுகையிடக்கூடும் என எச்சரித்த பின்னரும்கூட இராணுவம் விடுதலைப் புலிகளின் முற்றுகையை முறியடிக்கும் வகையில் தயார் நிலையில் இல்லாமல் இருந்துள்ளது''— என்று 'சண்டே ஐலண்ட்' பத்திரிகை இராணுவத்தைக் குறைகூறியுள்ளது.

''புலிகளின் முற்றுகையை நம்பவே கடினமாக உள்ளது என்றும்—

இது எப்படி நடந்தது என்பதை இராணுவத் தலைமை உடனடியாக அலசிஆராய்ந்து எது தவறாகப் போனது என்பதைக் கண்டுபிடிக்கவேண்டும்'' என்றும் 'சண்டே

[3ஆம் பக்கம் பார்க்க]

## பதியாத ஈழத் தமிழரை தேடி தமிழகத்தில் வேட்டை

சென்னை, ஜூலை 22

குறிப்பிட்ட காலக்கெடுவினுள் தமது பெயர்களைப் பதிவு செய்யாத சுமார் 2 ஆயிரம் இலங்கைத் தமிழரைத் தமிழ்நாடு பொலிஸார் நேற்று வரை கைது செய்துள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

தேடுதல் நடவடிக்கை சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய முக்கிய நகரங்கள் உட்பட சகல பகுதிகளிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

100 பேர் வரையில் சென்னை மாநகரிலும் 200 பேர் செங்கை மாவட்டத்திலும் கைது செய்யப்பட்டனர்.

முகாம்களுக்கு வெளியே

[3 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

Box Guitar விற்பனைக்கு உண்டு. விலை ரூபா 2000/- தொடர்பு: காலை 9 மணிக்கு முன்னர் S. N. R. படப்பிடிப்பாளர், 4, மணிக்கூட்டு ஒழுங்கை, யாழ்ப்பாணம். [பெருமாள் கோவிலடி]
[4210]

40 நாட்கள் நிரம்பிய பூசக் அகற்றப்பட்ட ஜேர்மன் ஷெப்பேர்ட் இன அல்ஷேசன் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. இவற்றிற்கு வேண்டிய சகல தடுப்பூசி மருந்துகளும் பெற்றுக் கொடுக்கப்படும். தொடர்பு: கே. எஸ். ஆர். போட்டோ, இல 12A, கந்தபுராண வீதி, சந்தர் மடம், யாழ்ப்பாணம்.
[17563]

### தேவை

தட்டச்சு, மனையியல், தையற்கலை, கைப்பணி ஆகியவற்றைப் பயிற்றுவிப்பதற்கான ஆசிரியைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப் பயிற்சிகளைப் பெறவிரும்புவோரும் விண்ணப்பிக்கலாம். தலைவர், சுடரொளி சனசமூக நிலையம், இல: 596/2, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். [சி/303]

### சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? விவாகம் நடைபெறுமா? வெளிநாடு போகலாமா? உங்கள் பிரச்சினை எதுவாயினும் உரிய பதில் தரப்படும். ஜாதகம், குறிப்பு எழுதவும், கைரேகை, விவாகப் பொருத்தம் பார்க்கவும் தொடர்பு: டாக்டர் த. சிவானந்தன் பிரபல சோதிடர், ஆனந்தா சோதிட நிலையம், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு.
(17569)

குருசாபம், பெரியோர் சாபம், வருபவர் மனம் நொந்து சென்றால் வீட்டில் தரித்திரம் உண்டாகும். இது முற்பிறவியில் செய்தால் சாதக மூலமும், இப்பிறவியில் செய்தால் ஆரூடம் மூலமும் அறிந்து தோஷ நிவாரணம் கூறப்படும். ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம், 146, பருத்தித்துறை வீதி, (அரசடிச்சந்தி) நல்லூர்.
(17558)

### அறிவித்தல்

புளியங்கூடல் வேலணையில் இயங்கி வந்த எனது வைத்திய நிலையங்கள் தற்காலிகமாக மானிப்பாய் வீதியில் உள்ள 198/1, பொன்னப்பா ஒழுங்கையில் (ஓட்டுமடம் சந்திக்கு அருகாமையில்] இயங்கி வருகின்றது. வைத்தியர் ச. சிவசம்பு.
(17530)

### யாருடைய மோதிரம்

சில நாட்களுக்கு முன் சாவகச்சேரி பஸ் நிலையத்தில் தவறவிட்ட மோதிரத்தை ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். மினி பஸ் இல. 30 சிறி 5522 செ. கனகரத்தினம் புகையிரத நிலைய வீதி, சாவகச்சேரி.
(4207)

## குண்டு வெடிப்பு ஒருவர் கைது

சென்னை, கீழ்ப்பாக்கம் சட்டக்கல்லூரி மாணவர் விடுதி ஒன்றில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்று தொடர்பாக ஒருவரை பொலீஸார் கைது செய்தனர்.

அச்சம்பவம் தொடர்பாக மேலும் மூவர் தேடப்பட்டு வருகின்றனர் என சென்னைச் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ-எ)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

### பூ. சி. சுப்பிரமணியம்

தோற்றம்: 1915 07-03 மறைவு: 1990-08-02

திதி: 22-07-1991

அப்பு என அழைப்போம் ஆசைகள் பல தீர்த்திடுவாய்
தப்பாத ஊழ்வினையின் சார்பறியோம் - எப்போதும்
உன்னை நினைத்திடுவோம் உன் வார்த்தை - நெஞ்சு வைப்போம்
அன்னையெனக் காத்தாய் ஐயா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள் பேரப்பிள்ளைகள்
நண்பர்கள், உற்றார், உறவினர்கள்.

இராச வீதி - வரிக்கம்பரை, கோப்பாய் வடக்கு, கோப்பாய். சு. கந்தசாமி.
[17579]

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 20 — 06 — 1948 மறைவு: 22 — 07 — 1990

அமரர்

### செபரட்டினம் மரியாம்பிள்ளை

ஆண்டொன்று சென்றதே உம்மை நாம் கண்டு,
அவனி வாழ்வில் அன்போடு உம் வாழ்வு கண்டு,
அனைவரும் களித்திட்ட வேளையில்,
விண்ணகம் சென்றாயோ யாம் அறியோம்
அன்பான செபா, செபத்துடன் உம்மோடு
இணைந்து ஒன்றிக்கிறோம்.

உமது நினைவில் வாழுகின்ற உடன் பிறப்புக்கள்
அருட்சகோதரிக்ள்
M. கொன்சிலியா H. C.,
M. மரியா H. C.
[4213]

## நினைவஞ்சலி



பிறப்பு: 01 — 05 — 1965 இறப்பு: 14 — 06 — 1990

### முருகேசு சுதாகரன் (சுதா)

பாய் போடும் வேளையிலும்
பைங்கிளியே உன் நினைவு
நோய் வந்து போகவில்லை
நொடிப் பொழுதில் மறைந்துவிட்டாய்
பாடிப் போன பாவியவன்
பாய்ச்சி விட்டான் குண்டுதனை
தாயிங்கு கதறுகிறாள் - தவமைந்தா
உன் நினைவால்
போன வழி சாந்தியுடன்
வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

உன் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, சகோதர, சகோதரிகள்,
மைத்துனர்மார், மருமக்கள்.

பலாலி தெற்கு, வயாவிளான். [17298]

## பனம் பொருள் கைப்பணிப் பயிற்சி

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினர் பெண்களுக்காக நடத்தவுள்ள பனம் பொருள் கைப்பணிப் பயிற்சியில் சேர விரும்புவோர் சங்கப் பணிமனையில் விண்ணப்பத்தை 2-8-1991 க்கு முன் சமர்ப்பிக்கவும்: ஆவணி மாதம் 10 ஆம் திகதி ஆரம்பமாகும் இப் பயிற்சிநெறி 3 மாதங்களுக்கு நடைபெறும்.

தலைவர்,
சைவ வித்தியா விருத்திச் சங்கம்,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி. [சி-0250]

## வைத்திய சேவை

தலைமுடி உதிர்கின்றதா? தலைமயிர் நரைக்கின்றதா? நரம்புத்தளர்ச்சியா? வாதரோகமா? தொய்வு வியாதியா? தேக வீக்கமா? கிரந்திப் பீடையா? மாதவிடாய்க்கோளாறுகளா? கவலை வேண்டாம் நாடுங்கள்: நலமடையுங்கள்!!

டாக்டர் த சிவானந்தன்
D. A. M , R A. M. P. [Sri Lanka]

### "சிவா வைத்தியசாலை"

384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு.
(17568)

## அந்தியேட்டியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு: 8 — 5 — 1955 உதிர்வு: 23 — 6 — 1991

அமரத்துவம் எய்திய எமது குடும்பத் தலைவர்

### சிவப்பிரகாசம் குபேரன் (NKS)

[குபேரன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்]

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 21-7-1991 ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற்றன. வீட்டுக்கிருத்தியம் 23-7-1991 செவ்வாய்க்கிழமை பகல் 11-00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெற உள்ளது. இதில் கலந்து கொண்டு தலைவரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்புத் தந்தை, தாய்
மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், உறவினர்கள்,
நண்பர்கள்.

''தங்க பவனம்''
சிலம்புப்புளியடி, சங்கானை. (17296)

## மரண அறிவித்தல்கள்

### திரு. P. R. அரியபூஷணம்

(ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர், மானிப்பாய்)

திரு. P. R அரியபூஷணம் (ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர், மானிப்பாய்) கொழும்பில் 15 - 07 - 1991 அன்று காலமானார். மரணச் சடங்குகள் 17-07-1991ல் நடைபெற்றன.

தகவல்;
B. A. ஜெபராஜன், (மகன)
Backus Lane, மானிப்பாய்.
(17576)

### அப்பாப்பிள்ளை தங்கம்

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது அராலி மேற்கில் வசித்து வந்தவருமான அப்பாப்பிள்ளை தங்கம் 17 - 07 - 91இல் காலமானார்.

இவர் அப்பாப்பிள்ளையின் [மலேசியாவில் வேலை பார்த்து இளைப்பாறியவர்] அன்பு மனைவியும் கணேசலிங்கம் [கொழும்பு], இராஜமலர் [மகாஜனாக் கல்லூரி ஆசிரியை], சிவலிங்கம் [U. K], தேம்பாமலர் [U. K], புனிதமலர் [U. K], தவலிங்கம் [U. K] ஆகியோரின் அன்புத் தாயாரும். ஜெகதாம்பிகை [கொழும்பு], சத்தியமூர்த்தி [கனடா], சௌதாமினி [U. K], சூரியநாராயணன் [U. K], சிறிதரன் [U. K] ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 18 - 07 - 91 காலை 10 மணியளவில் அராலியிலுள்ள இல்லத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டிக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
அப்பாப்பிள்ளை குடும்பத்தினர்
[17297]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### ஊரடங்காம் ஊரடங்கு!

ஆனையிறவில் போர் தொடங்கி இன்று பதின்மூன்றாவது நாள். அதனைத் தொடர்ந்து வடக்கில் ஐந்து மாவட்டங்களிலும் ஊரடங்குச் சட்டம் அமுல்செய்யப்பட்டது.

ஆனையிறவு கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ளது. ஆனால் அதனைச் சூழவுள்ள நான்கு மாவட்டங்களிலும் அரசாங்கம் ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்தது. தனது இராணுவ நடவடிக்கைத் தேவையின் பொருட்டே அது அவ்வாறு செய்தது.

ஸ்ரீலங்கா அரசாங்கம் அல்லது அதன் படைகள் பிறப்பிக்கும் ஊரடங்கு உத்தரவைத் தமிழ்ப் பிரதேசங்களில் வாழும் மக்கள் இப்போதெல்லாம் கணக்கில் எடுப்பதில்லை. மக்களுக்கு உதவும் பொருட்டன்றி, தனது தேவை கருதியே அரசு ஊரடங்கை நடைமுறைப்படுத்துவதால் மக்கள் அந்த நிலைப்பாட்டுக்கு வரவேண்டியதாயிற்று,

உரிய நடைமுறைப்படி. நாட்டில் குழப்பம் ஏற்பட்டால் அது மேலும் பரவாமல் தடுப்பதற்கும், மக்களுக்கு ஆபத்து ஏற்படும் என்று தெரிந்தால் அதனைத் தடுப்பதற்காகவுமே ஊரடங்கு உத்தரவு அமுல் செய்யப்படுவது வழக்கம்.

ஆனால் தமிழ்ப் பகுதிகளில் மக்களை வீட்டிற்குள் இருக்கச் செய்து பட்டினி போடவும், ஷெல் வீச்சு, குண்டு வீச்சு நடத்தி அவர்களைக் கொல்வதற்குமே ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. தமிழ்ப் பகுதிகளுக்கு வெளியே வாழ்வோர் இது பெரிதுபடுத்தப்பட்ட வர்ணனை என்று எண்ணிவிடக் கூடாது. உண்மையான தள நிலைமை இதுவே.

ஏனைய நாடுகளில் ஊரடங்கு ஆகக்கூடியது 72 மணித்தியாலங்களுக்கு மேல் தொடர்ச்சியாக அமுல் செய்யப்படுவது இல்லை. எந்தப் பெரிய கலவரங்கள், குழப்பங்களுக்கு மத்தியிலும், மக்கள் தமக்குத் தேவையான உணவுப் பொருள்களை வாங்குவதற்கும், மற்றும் அத்தியாவசிய அவசர வேலைகளைச் செய்வதற்காகவும் சில மணி நேரம் ஊரடங்கு தளர்த்தப்படுவது உண்டு.

ஆனால் தமிழ்ப் பிரதேசங்களில்? கப்பலில் இருந்து உணவுப் பொருள்களை இறக்குவதற்கு வசதியாக ஊரடங்கைத் தளர்த்த மறுத்துவிட்டது.

கிழமைக் கணக்காக, மாதக் கணக்காக ஊரடங்கு ஒரே தொடர்ச்சியாக அமுல் செய்யப்படுகிறது!

தமிழரைப் பொறுத்த மட்டில் தான் எதனைச் செய்தாலும் தட்டிக் கேட்க எவருமில்லை என்ற இறுமாப்பில், மமதையில் அரசாங்கமும், அதன் படைகளும் மனித நாகரீகத்துக்கு, உலக வாழ்க்கை வழக்கத்துக்கு ஒவ்வாத அநியாயங்களையும், அநீதிகளையும், அக்கிரமங்களையும் இழைத்து வருகின்றன.

குறிப்பிட்ட காலஎல்லையை மீறி மக்களை வீட்டுக்குள்ளே அடங்கி இருக்குமாறு உத்தரவிடுவது மிக மிகப் பெரும் மனித உரிமை மீறல். ஸ்ரீலங்காவில் மனித உரிமை பேணப்படுகிறதா என்பதை, பெயருக்காகவேனும் அவதானித்து வரும் வெளிநாடுகள் இது விடயத்தையும் கருத்தில் கொண்டால் மிகவும் நல்லது.

தமிழர்கள், ஸ்ரீலங்கா அரசின் ஆட்சிக்கு உட்படாத இன்னொரு தேசத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை அங்கீகரித்துத்தான், அரசு இவ்வகை மனித உரிமை மீறல்களை தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடுகிறதா என்ற மிக முக்கியமான கேள்வியும் எழுகிறது!

### சீ - பிளேன் நோட்டம்

பலாலி முகாமைச் சுற்றியிள்ள பகுதிகளில் நேற்று காலை9 மணிமுதல் சீ-பிளேன் வட்டமிட்டு நோட்டமிட்டது.

வயாவிளான், கட்டுவன், தெல்லிப்பளை, மாவிட்டபுரம், கீரிமலைப் பகுதிகளில் உள்ள இராணுவ 'சென்றி' களை அண்டிய பகுதிகளிலேயே சீ-பிளேன் சுற்றிச் சுற்றி வட்டமிட்டது.[ஒ-3]

### விசேட பூசை

யாழ்ப்பாணம், ஜூலை 22

யாழ். கச்சேரி கிழக்கு கடுக்காயடி ஸ்ரீ ஞான வைரவர் கோவிலில், இன்று பிற்பகல் 3 மணி முதல் இரவு 7 மணி வரை போராளிகளின் வெற்றிக்கு ஆசி வேண்டி விசேட அபிஷேகம், ஹோமம், பூசை, பிரார்த்தனை என்பன இடம் பெறும். [அ]

# இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைவிட்டால் அபாயம் வரும்

## முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். எச்சரிக்கிறார்

இலங்கை — இந்திய ஒப்பந்தத்திற்கு எதிராக இலங்கை அரசு செல்லக்கூடாது. அப்படிச் சென்றால் அது பெரிய அபாயத்தைக் கொண்டு வந்து விடும்.

—இப்படி எச்சரிக்கை விடுக்கிறார் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா.

கொழும்பில் உள்ள யு. என். ஐ. செய்தியாளருக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அப்பேட்டியில் திரு. ஜெயவர்த்தனா மேலும் சொன்னதாவது:-

1987 இல் செய்து கொள்ளப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தம்தான் இலங்கைக்கு மிகவும் பாதுகாப்பானதாகும்.

இந்த ஒப்பந்தத்தை கிழித்தெறிந்து விடுவதால் இலங்கையில் முற்றிலும் புதிய அரசியல் மற்றும் இராணுவ சூழ்நிலை ஏற்பட அது வழி வகுத்துவிடும்,

இந்த ஒப்பந்தம் — கடலில் தத்தளிப்பவருக்கு உயிர்காக்க உதவும் பாதுகாப்பு உடுப்புப் பட்டிபோல, இலங்கைக்கு உதவும்.

இதற்கு எதிராக இலங்கை அரசு செல்லக்கூடாது. அப்படிச் சென்றால் அது பெரிய அபாயத்தைக் கொண்டு வந்துவிடும்.

இந்த ஒப்பந்தத்தை கைவிட்டு விட்டால் விடுதலைப் புலிகளும், அவர்களைத் தொடர்ந்து வேறு போராளிக் குழுக்களும் இலங்கை அரசிடமிருந்து அதிகம் கேட்க ஆரம்பித்து விடுவார்கள்.

பின்னர் இந்தியாவும் இப் போராளிக் குழுக்களை ஆதரிப்பதாகக் கூறும் நிலைமை வந்துவிடும்.

ஜனாதிபதி பிரேமதாஸா இலங்கை—இந்திய ஒப்பந்தத்தைக் கைவிட்டு விடமாட்டார் என்று நம்புகின்றேன்.

விடுதலைப் புலிகள் தவிர— ஏனைய அனைத்துப் பிரிவினரும் — இந்திய அரசு, தமிழக அரசு மற்றும் ஒப்பந்தம் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் ஒப்பந்த ஷரத்துகளின்படி நடந்து வருகிறார்கள்.

''அமைதிப் படையினர் இலங்கையை விட்டு வெளியேறிய சமயம் விடுதலைப் புலிகள் மூச்சு விடுவதற்கே திணறிக்கொண்டிருந்தனர் — என்றார் ஜெயவர்த்தனா.

''அமைதிப் படையை வெளியே அனுப்பி விடுதலைப் புலிகளுக்கு மூச்சு வாங்க நேரம் கொடுத்து விட்டோம்'' — என்று மறைந்த அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா நாடாளுமன்றத்தில் கூறியதைப் பேட்டியின்போது திரு. ஜெயவர்த்தனா நினைவு கூர்ந்தார்.

''போராளிகள் பிரச்சினையில் இலங்கைக்கு உதவ இந்திய அரசு முன்வருமா?'' என்று கேட்டதற்கு —

''இனிமேல் இந்தியா இலங்கையின் அத்தகைய அழைப்பை ஏற்காது'' — என்று ஜெயவர்த்தனா சொன்னார்.

வடக்கு — கிழக்கு நிலைமையை ஜனாதிபதி பிரேமதாஸா கையாளும் விதம் குறித்துக் கேட்டபோது அது பற்றிக் கருத்துத் தெரிவிக்க அவர் மறுத்துவிட்டார்.

## வீட்டுக்கு ஒரு வீரர் ஆயுதம் ஏந்த வேண்டும்

### புலிகள் பிரமுகர் ராஜன் அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 22

வீட்டுக்கு ஓர் இளைஞனோ, யுவதியோ ஆயுதம் ஏந்திப் போராட முன்வர வேண்டும்.

யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. ராஜன் இவ்வாறு அறைகூவல் விடுத்தார்.

புலிகளின் குரல் வானொலிக்கு வழங்கிய பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது இடம்பெற்று வரும் கடும் சண்டையில் எமது வீரர்கள் பலர் உயிரிழந்தும் காயமடைந்தும் வருகிறார்கள். அவர்களது ஆயுதங்கள் எமது பாசறையில் இருக்கின்றன.

அந்த ஆயுதங்களைத் தூக்குவதற்கு தமிழீழ இளைஞர்களும், யுவதிகளும் முன்வர வேண்டும்.

இப்படி அவர் கூறினார். (த-5)

## புத்தூரில் போராளிகளுக்கு மக்கள் வீர அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூலை 22

வெற்றிலைக்கேணியில் நேற்று முன்தினம் களப்பலியான வீரவேங்கைகள் அறுவரின் புகழுடல்கள் நேற்று புத்தூர் மாவீரர் மண்டபத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன.

அர்ஜுன் (சிவானந்தம் நந்தகோபால் - திருமலை), விஜே (செல்லத்துரை சிற்றம்பலம் - பழுகாமம்), லலித் (வேல்முருகு விஜயகுமார் - குச்சவெளி), கொலின் (சண்முகநாதன் காந்தி - மயிலிட்டி), நேரு (சாமமூர்த்தி குமரேசன் - புத்தூர்), சோபிகா (பராசத்தி கந்தசாமி - ஏழாலைமேற்கு) ஆகியோரின் புகழுடல்களே அஞ்சலிக்கு வைக்கப்பட்டன.

புகழுடல்களுக்கு பெரும் எண்ணிக்கையான மக்கள் தமது அஞ்சலியைச் செலுத்தினர்.

விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் அங்கு அஞ்சலியுரை நிகழ்த்தினர்.

இறுதியில் புகழுடல்கள் கோப்பாய் மாவீரர் துயில் கொள்ளும் இல்லத்தில் தீயுடன் சங்கமமாகின.

## காப்பரண்கள் அமைக்க பொருள்கள் தந்துதவுக!

### மக்களிடம் புலிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 22

காப்பரண்களை அமைப்பதற்குத் தேவையான மண்வெட்டி, பிக்கான், சவள், வெற்றுச்சாக்குகள், வெற்றுப் பைகள் மற்றும் சாக்கு ஊசிகள் என்பன மேலும் அதிகளவில் தேவைப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் இவற்றைச் சேகரித்து வட்ட அலுவலகம், பிரிவு அலுவலகம், கிராமிய அலுவலகம் என்பவற்றின் ஊடாக மாவட்ட அலுவலகங்களில் சேர்க்குமாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கேட்டிருக்கிறது. (உ-5)

## இவர்களுக்கு அழைப்பு

தற்போதைய போர்ச் சூழலில் சேவை செய்ய விரும்பும ஆசிரியர்கள், ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோரை இன்று முற்பகல் 10 மணிக்கு கோண்டாவிலில் உள்ள மக்கள் முன்னணி யாழ். மாவட்ட செயலகத்தில் கூடுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

**சனசமூக நிலையங்கள்**

யாழ். மாவட்டத்தில் உள்ள சனசமூக நிலையங்களின் தலைவர்கள், செயலாளர்கள் மற்றும் விளையாட்டுக் கழகங்களின் பொறுப்பாளர்களுக்கான அவசர கூட்டம் ஒன்று. இன்று முற்பகல் 11 மணிக்கு கோண்டாவிலில் மக்கள் முன்னணியின் யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்ட அனைவரையும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

**அபி, சங்கங்கள் மாதர் சங்கங்கள்**

யாழ். மாவட்டத்தில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் அபிவிருத்திச் சங்கங்களின் தலைவர்கள் மற்றும் செயலாளர்கள் ஆகியோரை இன்று பிற்பகல் 2 மணிக்கு கோண்டாவிலில் உள்ள யாழ். மாவட்ட மக்கள் முன்னணிச் செயலகத்திற்கு வருமாறு அழைப்பு விடுவிக்கப்பட்டிருக்கிறது.

இன்றைய கூட்டங்களில் கலந்துகொள்ளும் அமைப்பாளர்கள் தங்களை குறிப்பிட்ட அதே நேரங்களில் சமுகம் தருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## கடற்றொழில் உபகரணங்கள் பெரும் அளவில் சேதம்!

வெற்றிலைக்கேணி — கட்டைக்காட்டுப் பகுதியில் துருப்புகள் தரையிறக்கப்பட்ட பின்னர் படையினர் நடத்திய தாக்குதலில் பல லட்சம் ரூபா பெறுமதியான கடற்றொழில் உபகரணங்கள் சேதமடைந்துள்ளன.

தாளையடி முதல் கண்டிக்குளம் வரையிலான கரையோரப் பிரதேசத்தில் காணப்பட்ட படகுகள், வள்ளங்கள் உட்பட பல உபகரணங்கள் தாக்குதல்களினால் நர்சமர்கியுள்ளன.

இதற்கிடையில்—

படையினரின் நடவடிக்கையினால்—தாளையடி தொடக்கம் ஆழியவளை வரையுள்ள பகுதிகளில் — பொதுமக்கள் வெளியேறிய வீடுகளில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டத் தொடங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

### முன்னேற...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வரை முன்னேறிய படையினர், அதுவரை தாம் கடந்து வந்த பாதை நெடுகிலும் தங்கள் நிலைகளை ஸ்திரப்படுத்திக் கொண்டனர். இவ்வாறு சுமார் இரண்டரை மைல் தூர நீளப் பிரதேசத்தில் நிலைகொண்டிருந்த படையினரின் மத்திய பகுதியில் நேற்று மாலை விடுதலைப் புலிகள் ஆக்கோஷமாகப் புகுந்து, பெரிய அளவில் அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

கடலோரத்தில் இருந்து சுமார் ஒனறேகால் மைல் தூரத்தில் உள்ள இந்தப் பகுதியிலேயே அதிரடித் தாக்குதல் நடத்தப்பட்டது. கடும் விமானத்தாக்குதல்களுக்கு மத்தியில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் இரண்டரை மைல் நீளப் பிரதேசத்தில் நிலை கொண்டிருந்த இராணுவம் இரண்டாகச் சிதறிப் பிரிந்தது.

பெரும் படை அணி கடலோரப் பகுதிக்கு நகர்ந்து பின்நோக்கிச் செல்ல—

ஆனையிறவு நோக்கி முன்னேறிய — பல நூற்றுக் கணக்கான சிப்பாய்களைக் கொண்ட படை அணி நிலப் பகுதியில் புலிகளிடம் சிக்கிக் கொண்டது.

இவ்வாறு மாட்டிக்கொண்டு திணறும் சுமார் இரு நூறு சிப்பாய்களை சுற்றிவளைத்து மடக்கிப் பிடிப்பதற்காக புலிகள் இரவிரவாக கடும் சமர் நடத்திக்கொண்டிருந்தனர்.

சிக்கிய சிப்பாய்களின் நிலை குறித்து இன்று சாலையில் தகவல்கள் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (உ)

### பதியாத...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வாழும் இலங்கைத் தமிழர் தமது பெயர் மற்றும் விவரங்களை அருகில் உள்ள பொலீஸ் நிலையங்களில் பதிவு செய்து கொள்ள வழங்கப்பட்ட காலக்கெடு கடந்த சனிக்கிழமையுடன் முடிவடைந்ததைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கையில் பொலீஸார் ஈடுபட்டுள்ளனர்.

பதிவு செய்யாத ஈழத்தமிழர்களை தேடிக் கண்டுபிடிக்க 65 பொலீஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

இது இவ்வாறிருக்க—

இதுவரை 28 ஆயிரம் இலங்கைத் தமிழரே தங்கள் பெயர்களைப் பதிவு செய்துள்ளனர்.

சென்னை மாநகரில் முகாம்களுக்கு வெளியே வசிப்பதாகக் கருதப்படும் சுமார் 10 ஆயிரம் இலங்கைத் தமிழர்களில் 5 ஆயிரம் பேர் மட்டுமே தங்கள் பெயர்களைப் பதிவு செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-எ]

### கொழும்பு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஐலண்ட்' வற்புறுத்தியுள்ளது.

''விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. பிரபாகரன் ஆனையிறவு முகாமைக் கைப்பற்றத் தமது போராளிகளுக்குத் திடீரெனக் கட்டளையிடவில்லை.

மாறாகக் கடந்த 6 மாதங்களாக விடுதலைப் புலிகள் திட்டமிட்ட தாக்குதல் இது'' —என்று 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை அரசுப் படையை விமர்சித்துள்ளது. (உ-எ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கோடிக்கரை சண்முகம் கொலை; அதிகாரிகளின் "உள்வீட்டு" வேலை?

சென்னை, ஜூலை 22
கோடிக்கரை சண்முகத்தின் மறைவு திட்டமிட்ட படுகொலையாக இருக்கலாம் என்று சுயாதீன செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

தமிழகத்தில் விடுதலைப் புலிகளுக்கு பகிரங்கமாக ஆதரவு வழங்கி வரும் முக்கிய பிரமுகர்களை மிரட்டி ஒடுக்கும் ஒரு நடவடிக்கையாகவே அவர் படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

திரு. சண்முகம் கோடிக்கரையில் ஒரு பிரபல புள்ளி. நிலப்பிரபு. தமிழகக் கரையோரத்தில் மக்கள் செல்வாக்கு அதிகம் உள்ளவர். அவரது பிள்ளைகள் ஈழத் தமிழரைத் திருமணம் செய்துள்ளனர்.

ஈழத் தமிழருடன் அதிகம் தொடர்புடைய திரு. சண்முகம் விடுதலைப் புலிகளின் தலைவர்களுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் பகிரங்கமாக உதவி வந்தார் என்று சொல்லப்படுகிறது.

எத்தகைய எதிர்ப்புக்கு மத்தியிலும் புலிகளுக்கு பகிரங்கமாக உதவவேண்டும் என்பதில் பிடிவாதமாக இவர் இருந்து வந்துள்ளார்.

இதனால் புலிகளுக்கு எதிரான கொள்கையைக் கடைப்பிடித்து வரும் மத்திய, மாநில அரசுகளின் அதிகாரிகள் சண்முகம் போன்ற கொள்கையுடையோருக்கு ஒரு படிப்பினையாக இந்த கொலைச் சம்பவத்தை திட்டமிட்டுச் செய்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

திரு. சண்முகம் கொலை செய்யப்படுவதற்கு முன்னரே அவர் பெருமளவு ஆயுதங்கள் மற்றும் தொலைத் தொடர்பு சாதனங்கள் புதைக்கப்பட்ட இடங்களைக் காட்டிக் கொடுத்தார் என்ற செய்தியை ராஜீவ் கொலை சம்பந்தமான புலன் விசாரணைக் குழுவினரே திட்டமிட்டு அவிழ்த்து விட்டனர் என்றும்—

அதன் பின்னரே அவர் படுகொலை செய்யப்பட்டார் என்றும் கருதப்படுகிறது.

ஒரு நாட்டின் முக்கிய தலைவரின் கொலை வழக்குத் தொடர்பாக கைது செய்யப்பட்டு, முக்கிய சந்தேக நபர் என்று அறிவிக்கப்பட்ட வரை—

அதுவும் முக்கிய தகவல்களையும், ஆயுதங்கள் போன்றவை புதைத்து வைக்கப்பட்டிருந்த இடங்கள் பற்றிய விவரங்களையும் வெளியிட்டதாகக் கூறப்படும் சந்தேகநபரை—

''போதிய பாதுகாப்பின்றி விருந்தினர் விடுதியில் வைத்திருந்தோம். அவர் பின்கதவால் தப்பிச் சென்று தற்கொலை செய்து கொண்டார்'' — என்று கூறுவது எவ்வளவு தூரம் அபத்தமானது என்று சுயாதீன செய்தி வட்டாரங்கள் கேள்வி எழுப்பியிருக்கின்றன.

தற்கொலை செய்யும் அளவுக்கு சிக்கலை ஏற்படுத்தக் கூடிய தகவல்களை திரு. சண்முகம் தெரிந்து வைத்திருந்தாரானால், தாம் தேடப்படுவதாகக் கேள்விப்பட்டவுடன் புலன் விசாரணையாளர்களிடம் அவர் தாமாகவே சென்று சரண் அடைந்திருப்பாரா என்றும் கேள்வி எழுப்பப்படுகிறது.

இந்திய அதிகாரிகளினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்த சண்முகம் நேற்று முன்தினம் அதிகாலையில் வேதாரண்யத்தில் அரச விருந்தினர் ஒய்வு விடுதிக்குப் பின்னால் உள்ள காட்டில் மரம் ஒன்றில் சுருக்கிட்டு உயிரிழந்த நிலையில் சடலமாக காணப்பட்டார் என்பது தெரிந்ததே. (உ)

## சடலம் ஒப்படைப்பு

சென்னை, ஜூலை 22
மர்ம மரணத்துக்கு ஆளான வேதாரண்யம் நிலப்பிரபு சண்முகத்தின் சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் அவரது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (இ-எ)

## இன்று கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 22
யாழ். பல்கலைக்கழக அனைத்து மாணவர்களுக்குமான பொதுக்கூட்டம் இன்று முற்பகல் 10 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

அனைத்து மாணவர்களையும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு மாணவரவை கேட்டுள்ளது. (ஒ)

## பொன்னாலை பகுதியில் ஷெல் தாக்கு!

சுழிபுரம், ஜூலை 22
காரைநகர் படையினர் பொன்னாலை, சுழிபுரம், மூளாய் பகுதிகளை நோக்கி நேற்றும், நேற்று முன்தினமும் ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

பொன்னாலை கோவிலடிப் பகுதியைச் சூழவுள்ள வெளியான பிரதேசம், மூளாய் தெற்குப் பகுதி வயல்கள், தோட்டங்கள் மற்றும் பல இடங்களிலும் ஷெல்கள் விழுந்து வெடித்தன. [ஒ-28]

## ஆண்டு இரண்டிலும் ஆறாத அலைகள்

தாயக மண்ணில்: 11 — 01 — 1969



தாயக மீட்பில்: 22 — 07 — 1989

### வல்லிபுரம் விமலேஸ்வரன் (ஈசன்)
லெப்டினன்ட் ஆஷா

ஊரோ வெறுக்க உறவோர் ஒதுக்க
உன்னவர்க்காக வாழ்ந்திருந்தோம் அறிவாயே நீ!
ஊரை உறவை உற்றாரை சுற்றமதை
உன் சிலைவைப்பினிலே உணர்த்திவிட்ட உத்தமனே!
உன் சிலைக்கே இன்று இவ்வளவு ஆகிவிட்டால்
உன் உயிருக்கு அன்று என்ன விலை போயிருக்கும்?
அடுத்திருந்து வந்து அழித்தவன் தான் அந்நியனானால் உன் - முகாம்
காட்டிக் கொடுத்தவரையும் காலத்தில் இனம் கண்டோம் - அன்று
மதியாதார் தலைவாசல் மிதிக்கின்றார் இந்நாளில் - அன்று
மதித்தவர் தலைவாசல் மறந்ததைத்தான் நீ அறிவாயோ?
கண்ணகிக்கும் அன்று ஆதாரம் இல்லையென்றால்
காப்பியமே இன்று வந்திருக்காது தம்பி!
கச்சதீவுக்கும் அன்று ஆதாரம் இல்லையென்றார்
காலம் கடந்துதானே காரணமே வந்திருக்கு! - உன் சிலை
கற்சிலையென்றோ ஆதாரம் இல்லையென்றார்
கல்லறையல்ல! அது கருப்பையின் களஞ்சியமடா!
அஞ்சார்க்கு சாவென்பதென்றுமில்லையென்று சொன்னால்
ஆதி அந்தமற்ற ஈசனுக்கும் ஆதாரம் கேட்பாரோ?
வெட்டிப்பேச்சு, வீண்பேச்சு, விதண்டாவாதம் உன்முன் செய்தோர் - இன்று
வேங்கைகளே கதியென்று சேர்ந்ததை (?) நீ அறிவாயோ?
தருமத்தின் வாழ்வதனை சூது கவ்வும் '' தருமம் மறுபடியும் வெல்லும் ''
எனுமியற்கை மருமத்தை நம்மாலே உலகங் கற்கும்!
வழிதேடி விதி இந்தச் செய்கை செய்தார்
கருமத்தை மேன்மேலும் காண்போம் - இன்று
கட்டுண்டோம் - பொறுத்திருப்போம் - காலம் மாறும்
தருமத்தை அப்போது வெல்லக் காண்போம்!

ஆஷா குடும்பத்தினர்.

'' தாயகம் ''
''சமுத்திரதாரா'' சரசாலை. (2763.)

## ஆனையிறவுச் சண்டையில் ஐந்து படைப் பிரிவுகள்

ஆனையிறவுப் பகுதிச் சண்டையில் இலங்கை இராணுவத்தின் ஐந்து பிரிவுகள் ஈடுபட்டுள்ளன என்றும்—

தளபதிகளான மேஜர் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ, மேஜர் ஜெனரல் விஜயவிமலரத்னா ஆகியோர் அப்படைப் பிரிவுகளுக்கு தலைமை வகித்து அவற்றை வழி நடத்திச் செல்கின்றனர் என கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று கூறுகிறது. (இ-எ)

## லண்டன் 'தமிழ்நேசன்' ஆசிரியர் சென்னையில் கைது

சென்னை, ஜூலை 22
லண்டனில் இருந்து வெளியாகும் 'தமிழ்நேசன்' பத்திரிகையின் ஆசிரியர் திரு. எஸ். சிவநாயகம் சென்னையில் பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

அவருடன் இன்னொரு இலங்கைத் தமிழரான குகதாஸன் என்பவரும் கைதானார்.

தகுந்த பயண ஆவணங்களை அவர்கள் வைத்திருக்கவில்லை என்பதற்காக பொலீஸாரால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அவர்களிடமிருந்த 16 ஆயிரம் ரூபா இந்தியப் பணமும், 3 ஆயிரம் அமெரிக்க டொலரும் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டன. (இ-எ)

## தமிழக மீனவர் படகுகளுக்கு வானொலிச் சாதனங்கள்

### ஜெயலலிதா அரசின் புதிய திட்டம்

சென்னை, ஜூலை 22
பத்துப் பத்து படகுகள் கொண்ட அணியாக சர்வதேச கடல் எல்லைவரை சென்று மீன் பிடிக்க தமிழக மீனவருக்கு அனுமதி வழங்கப்பட இருக்கிறது.

ஓர் அணியின் தலைமைப் படகில் வானொலி சாதனங்களை கடற்படையினர் பொருத்தி உதவுவர். தலைமைப் படகில் உள்ளவர்கள் தொழில் முடிந்து கரைக்குத் திரும்பும்வரை ரோந்து புரியும் கடற்படைக் கப்பலுடன் அடிக்கடி தொடர்பு கொள்ள வேண்டும்.

தமிழகக் கடற்கரையில் இருந்து 5 மைல் தொலைவிற்குள் மீன் பிடிக்க வேண்டும் என்று விடுக்கப்பட்ட உத்தரவை இந்த நிபந்தனையுடன் தளர்த்த தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா முன்வந்திருக்கின்றார் என்று நேற்று அறிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## மணலாறு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
னார்], லெப்டினன்ட் பிரதாப் [சண்முகம் முரளி - மட்டக்களப்பு], இரண்டாம் லெப்டினன்ட் செல்வம் [செ. சத்தியசீலன் - மன்னார்], நிதி [காந்தமுத்து சிவகுமாரன் - மட்டக்களப்பு] ஆகிய போராளிகளே வீரமரணம் அடைந்தனர்.

படையினரிடமிருந்து ரி56-2 ரகத் துப்பாக்கி —1, 40 மி. மீ. ஷெல்கள் —3, ஆர்.பி.ஜி. ஷெல்கள் —2 என்பவற்றைப் புலிகள் கைப்பற்றினர். (உ-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 22-07-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள் - இரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விசேட பதிப்பு

விலை ரூபா 3-00

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி மீ 06 உ திங்கட்கிழமை (22-07-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 230

## வெற்றிலைக்கேணிப் பகுதி அருகே

# 50க்கு மேல் படையினர் பலி!

# 29 பேரின் சடலங்கள் மீட்பு!!

### சிக்கிக் கொண்ட இராணுவ அணி புலிகளின் தாக்குதலில் சின்னாபின்னம்

யாழ்ப்பாணம், ஜூலை 22

வெற்றிலைக்கேணி - கட்டைக்காட்டுப் பகுதியில் தரையிறங்கிப் பின்னர் விடுதலைப் புலிகளின் சுற்றிவளைப்பில் சிக்கிக் கொண்ட இராணுவ அணியில் 50 இற்கும் அதிகமானோர் உயிரிழந்தனர்! அவர்களில் 29 பேரின் சடலங்களை விடுதலைப் புலிகள் மீட்டு எடுத்துள்ளனர்.

புலிகளின் சுற்றிவளைப்பில் சிக்கிய படை அணி புலிகளின் தாக்குதலில் சின்னாபின்னமாகியது.

வெற்றிலைக்கேணி - கட்டைக்காட்டுப் பகுதியில் தரையிறங்கி, ஆனையிறவு நோக்கி நகர்ந்து சென்று கொண்டிருந்த படையினர் மீது நேற்று மாலை விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதல் நடத்தியதும் —

அந்தத் தாக்குதலில் இராணுவத்தினர் சிதறிப் பிரிய, படை அணி ஒன்று புலிகள் வசம் சிக்கிக் கொண்டதும் தெரிந்தவையே.

இந்தப் படை அணி மீது நேற்று இரவிரவாக விடுதலைப் புலிகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தினர்.

இரவு நடந்த இத்தாக்குதலிலேயே ஐம்பதுக்கும் அதிகமான படையினர் உயிரிழந்ததாக யுத்தமுனைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

உயிரிழந்த படையினரில் 29 பேரின் சடலங்களைப் புலிகள் மீட்டுள்ளனர்.

சிக்குண்ட படை அணி மீது புலிகள் நடத்திய தாக்குதலில் அந்த அணி சின்னாபின்னமாகி சிதறியதாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ-3-5]

## 29 சடலங்களும் மக்கள் பார்வைக்கு!

யாழ்ப்பாணம், ஜூலை 22

வெற்றிலைக்கேணிக்கு அருகே நேற்று புலிகளினால் நடத்தப்பட்ட அதிரடித் தாக்குதலின் பின்னர் கைப்பற்றப்பட்ட 29 படையினரின் சடலங்களும், ஆயுதங்களும் நாளை நல்லூர் முத்திரைச் சந்தியில் மக்கள் பார்வைக்கு வைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சடலங்கள் பின்னர் ஸ்ரீலங்கா அரசிடம் ஒப்படைக்கப்படுவதற்காக, செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவிடம் கையளிக்கப்படும் என்றும் தெரிகிறது. (இ)

# வானத்தாக்குதல்கள்

# புலிகள் நடத்தலாம்!

### ஸ்ரீலங்கா அரசுக்கு புலனாய்வுப் பிரிவு எச்சரிக்கை

மணிலா, ஜூலை 22

தமிழீழ விடுதலைப் புலிகளும் வான் வழித் தாக்குதல்களை நடத்தக் கூடும். அதன் முன்னோடியாக ஒரு விமானத்தைத் தயாரித்து சண்டையில் ஈடுபடுத்தும் முயற்சியில் அவர்கள் வெற்றி அடைந்திருக்கலாம்.

இவ்வாறு ஸ்ரீலங்கா புலனாய்வுத் துறை ஸ்ரீலங்கா அரசுக்கும் விமானப்படைக்கும் எச்சரிக்கை முன்அறிவிப்பு கொடுத்துள்ளதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

தூர கிழக்கு ஒலிபரப்புக் கழகம் நேற்று நண்பகல் தனது ஒலிபரப்பில் இந்தச் செய்தியை ஒலிபரப்பியிருக்கிறது.

இந்தியப் படையினரின் வருகைக்கு முன்பதாக விடுதலைப் புலிகள் ஒரு விமானத்தைத் தயாரிக்கும் கட்டமைப்பு வேலைகளில் ஈடு பட்டு வந்தார்கள் என்பது தெரிந்ததே. அப்போது ஏற்பட்ட அனுபவங்களைத் தொடர்ந்து தற்போது புலிகள் தமது முயற்சியில் வெற்றி [illegible] ஒலிபரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது. [உ-10]

## 28 வேங்கைகள் நேற்று களப்பலி

யாழ்ப்பாணம், ஜூலை 22

வெற்றிலைக்கேணி அருகே நேற்றிரவு நடந்த அதிரடித் தாக்குதலில் 28 வீரவேங்கைகள் களப்பலியானார்கள்.

தாயக மீட்புப் போரில் வீரமரணம் அடைந்த இந்தப் போராளிகளுக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் பற்றிய பெயர், விவரங்கள் இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைக்கவில்லை. (ஒ)

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 22

வெற்றிலைக்கேணி அருகே நேற்றிரவு புலிகள் சுற்றிவளைத்து நடத்திய அதிரடித் தாக்குதலின்போது ஏராளமான ஆயுதங்களையும் புலிகள் கைப்பற்றியுள்ளனர்.

அவை வருமாறு:-

★ ரி 56 ரக எல். எம். ஜி. — 3
★ 40 எம். எம். ரக கிரனேட் பிஸ்டல் — 3
★ 40 எம். எம். ரக — ரி-69 ரக ஆர். பி. ஜி. — 2
★ 60 எம். எம். மோர்ட்டார் — 3
★ ரி 56 ரக ரைபிள் — 25க்கு மேல்
★ ஏராளமான ஆர். பி. ஜி ஷெல்கள்
★ ஏராளமான மோட்டார் ஷெல்கள்
★ ஆயிரக்கணக்கான ரவைகள் (ஒ)

## போர் முனையில் பெரும் திருப்பம்!

யாழ்ப்பாணம், ஜூலை 22

ஆனையிறவில் கடந்த பதின்மூன்று நாட்களாக நடந்து வரும் யுத்தத்தில் நேற்றுப் பெரும் திருப்பம் ஏற்பட்டது.

ஆனையிறவு பிரதான முகாமில் விடுதலைப் புலிகளால சுற்றி வளைக்கப்பட்ட 800க்கும் அதிகமான இராணுவத்தினரை மீட்பதற்காக கட்டைக்காடு - வெற்றிலைக்கேணியில் ஆயிரக் கணக்கில் அரச துருப்புகள் கடல் மூலம் தரை இறக்கப்பட்டன.

இம் மாதம் 14 ஆம் திகதி தரையிறங்கிய படையினர் ஒரு வார காலமாக நத்தை வேகத்தில் அசைந்து. அசைந்து நகர்ந்து இரண்டரை மைல்கள் முன்னேறினர்.

எட்டாம் நாளான நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இராணுவத்தினரின் முன்னேற்றத்தைத் தடுக்கும் விதத்தில்-

அவர்கள் நிலைகொண்டிருந்த போர்க் களத்திற்குள்

[மறுபக்கம் பார்க்க]

## களத்தில் மீட்கப்பட்ட படையினர் சடலங்கள் பற்றி கொழும்புக்குத் தகவல்

வெற்றிலைக்கேணிப் பகுதியில் சனி, ஞாயிறு நடந்த தாக்குதல்களில் உயிரிழந்த படையினரின் 3 சடலங்களையும், ஸ்ரீலங்கா அரசிடம் கையளிப்பது குறித்து இன்று காலை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு, கொழும்புடன் தொடர்பு கொண்டிருந்தது.

சடலங்களைக் கையேற்க அரசும் அரசு சம்மதம் தெரிவித்தால் பருத்தித்துறை கடலில் வைத்து கடற்படையினரிடம் அவற்றை ஒப்படைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-3-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரடங்கு வேளையிலும்

# தொண்டர் நிறுவனங்களின் வாகனங்கள் வர அனுமதி!

யாழ்ப்பாணம், ஜூலை 22

வவுனியா, மன்னார் மாவட்டங்களில் அமுலில் இருக்கும் ஊரடங்கு நீக்கப்படமாட்டாது. ஆனால் நிவாரண வேலைகளில் ஈடுபடும் சர்வதேச தொண்டர் நிறுவனங்களின்வாகன அணிகள் இந்த மாவட்டத்தினூடாக ஊரடங்கு வேளையிலும் போய்வரக் கூடியதாக அனுமதி வழங்கப்படும்.

இவ்வாறு ஸ்ரீலங்கா பாதுகாப்பு அமைச்சு தொண்டர் நிறுவனங்களுக்கு அறிவித்திருக்கிறது.

தொண்டர் நிறுவனங்கள் தமது நிவாரண வேலைகளை மேற்கொள்வதற்கு வழியாக இந்த இரு மாவட்டங்களிலும் கடந்த ஞாயிறன்று ஊரடங்கு நீக்கப்படும் என பாதுகாப்பு அமைச்சு அந்த நிறுவனங்களுக்கு முன்னர் உறுதியளித்திருந்தது தெரிந்ததே.

ஆனால் தற்போது, இராணுவ நடவடிக்கைகள் திட்டமிட்டபடி பூர்த்தியடையாததால் ஊரடங்கை நீக்க முடியாது என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருக்கிறது:

தொண்டர் நிறுவனங்களுக்கு விசேட அனுமதி அளிக்கும் திட்டத்தின்படி —

ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் தூதரத்தின் ஏற்பாட்டில் உணவுப் பொருள்களை ஏற்றிக் கொண்டு 18 லொறிகள் நாளை வவுனியாவூடாக மடு அகதி முகாமுக்குச் செல்லும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. [உ-3]

## சமாதான மாநாட்டில் ஜோர்தானும் பங்குபற்றும்

அமெரிக்கா கூட்டும் உத்தேச அரபு - இஸ்ரவேல் சமாதான மாநாட்டில் தான் கலந்து கொள்ளப்போவதாக ஜோர்தான் அரசும் அறிவித்துள்ளது.

தலைநகர் அம்மானில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேக்கருடன் பேச்சுக்கள் நடத்திய பின்னர் ஜோர்தான் மன்னர் ஹுசேன் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

ஜோர்தான் தூதுக்குழுவில் பலஸ்தீன விடுதலை இயக்கப் பிரதிநிதிகளையும் சேர்த்துக் கொள்ளத் தாம் தயாராக இருப்பதாகவும் மன்னர் ஹுசேன் தெரிவித்தார்.

இந்த சமாதான மாநாட்டில் கலந்து கொள்ள தயாராக இருப்பதாக சிரியா, எகிப்து, சவூதி அரேபியா ஆகிய நாடுகள் அறிவித்திருந்தன என்பது தெரிந்ததே. (உ-எ)

## குண்டு வெடிப்பில் காயமடைந்தவர் மரணமானார்

சென்னை, ஜூலை 22

சென்னை - கீழ்ப்பாக்கம் சட்டமாணவர் விடுதி வளாகத்தினுள் கடந்த வாரம் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் படுகாயமடைந்த பெண் மரணமானார் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

## தொடர்ந்தும் பொம்மையே ஜனதா தள் கட்சித் தலைவர்

### அரசியல் குழு தீர்மானம்

ஜனதா தள் கட்சியின் தலைவராக திரு. எஸ். ஆர். பொம்மையே தொடர்ந்து இருப்பார் என்று அறிவிக்கப்பட்டது.

கடந்த ஞாயிறு நடைபெற்ற ஜனதா தள் அரசியல் குழுவின் அவசரக் கூட்டத்தில் இம் முடிவு எடுக்கப்பட்டதாக கட்சிப் பேச்சாளர் ஜெய்ப்பால் ரெட்டி கூறினார்.

கடந்த பொதுத் தேர்தலில் ஜனதா தள் அடைந்த தோல்விக்கான பொறுப்பை ஏற்று தலைவர் பதவியில் இருந்து பொம்மை வெளியேற வேண்டும் என்று திரு. அஜித் சிங் வெளியிட்ட அறிக்கையை அரசியல் குழு பரிசிலனை செய்தது.

திரு. அஜித்சிங் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. (உ-எ)

## சிங்கள மீனவருக்கு விசேட சலுகை

கொழும்பு, ஜூலை 22

திருகோணமலையில் குடியேற்றப்பட்ட இரண்டாயிரம் சிங்கள மீனவ குடும்பங்களுக்கு விசேட வசதிகளை கடற்றொழில் அமைச்சு செய்துள்ளது.

கடந்த வருடம் ஜூன் மாதத்துக்கு பின்னர் சிறிமாபுர, விஜிதபுர பகுதிகளில் இவர்கள் குடியேற்றப்பட்டிருந்தனர்.

இவர்கள் குடியேற விசேட கொடுப்பனவு, மீன்பிடிக்க தேவையான உபகரணங்கள் யாவும் வழங்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவர்களின் குடும்ப அங்கத்தவர்கள் சுயதொழில் வாய்ப்புப் பெறவும் விசேட திட்டம் அமுல் செய்யப்பட இருக்கிறது. (இ-3)

கோடிக்கரை சண்முகம் மறைவு:

## மத்திய புலனாய்வுப் பிரிவு தவறு இழைத்துவிட்டது

### காங்கிரஸ் எம். பிக்கள் குற்றச்சாட்டு

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக கைது செய்யப்பட்ட முக்கிய சந்தேக நபரான சண்முகத்தைப் பாதுகாப்பாக வைத்திருக்க மத்திய புலனாய்வுத் திணைக்களத்தினர் தவறி விட்டனர் என்று குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

புதுடில்லியில் இந்திரா காங்கிரஸ் எம். பிக்கள் ஏழு பேர் விடுத்த அறிக்கை ஒன்றில் இக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

சண்முகத்தின் மரணத்தின் பின்னால் உள்ள மர்மம் குறித்து பூரண விசாரணை நடத்த வேண்டும் என்றும் அவர்கள் கோரியுள்ளனர்.

ராஜீவ் கொலை பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்ட நீதியரசர் வர்ம கமிஷனின் அதிகார வரம்பு விஸ்தரிக்கப்பட வேண்டும். அக் கொலை குறித்து மேற்கொள்ளப்பட்ட உள் நாட்டு மற்றும் வெளிநாட்டுத் தொடர்புகள் பற்றியும் விசாரிக்கக் கூடியதாக கமிஷனுக்கு அதிகாரம் அளிக்கப்பட வேண்டும் என்றும் இந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. [இ-எ]

## போர் முனை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

புகுந்த விடுதலைப் புலிகள் பேரிடித் தாக்குதல் நடத்தினர்.

அதன் விளைவாக ஆனையிறவுப் போர் முனையில் பெரும் திருப்பம் உண்டாகியது. முன்னேற முயன்ற படையினரில் ஒரு பகுதியினர் புலிகளால் சுற்றி வளைக்கப்பட்டு, மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.

ஆனையிறவு முகாமிற்குள் 800 சிப்பாய்கள் புலிகளின் முற்றுகைக்குள் சிக்கித் தவிக்கும் அதேவேளை—

அவர்களை மீட்க வந்த புதிய அணியினரின் ஒரு பகுதியினரும் புலிகளிடம் மாட்டிக் கொண்டது— யுத்த முனையில் விடுதலைப் புலிகளின் போர்த் திறனின் கூர்மையை எடுத்துக்காட்டுவதாகும்.

தமது சகபாடிகளை மீட்க வந்து, தாமும் சிக்கிக்கொண்டவர்கள் புலிகளுடன் மோத முற்பட்டனர். அவர்களில் 50 பேர் பலியாக நேர்ந்தது.

நேருக்கு நேர் நெற்றிமுட்ட மோதிக் கொள்ளும் போதும் புலிகள் வெற்றியே காண்பார்கள் என்பதை இந்தப் புதிய திருப்பம் எடுத்துக் காட்டியிருப்பதாக மதிப்பீடு [illegible]

## எம். எல். ஏக்களைக் கடத்த ஈழப் போராளிகள் முயற்சி?

### காங்கிரஸ் தலைவர் கூறுகிறார்

சென்னை, ஜூலை 22

தமிழக கடலோரப் பகுதி எம். எல். ஏக்கள் கடத்திச் செல்லப்படுவர் என்று எச்சரிக்கை விடப்பட்டிருப்பதாக தமிழ் நாடு சட்டசபை எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

எம். எல். ஏக்களுக்கு தீவிர பாதுகாப்பு வழங்க அதிகாரிகள் மூலம் நடவடிக்கை எடுக்கும் படியும் அவர் கோரியுள்ளார்.

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள தமது உறுப்பினர்களை விடுவிக்கக்கோரியே ஈழப் போராளிகள் இக்கடத்தலை நடத்தத் திட்டமிட்டிருப்பதாகவும் திரு. பாலசுப்பிரமணியம் கூறினார்.

கரையோரப் பகுதி எம். எல். ஏக்கள் சிலருக்கு அவர்களைக் கடத்துவது பற்றிய எச்சரிக்கைக் கடிதங்கள் ஈழப் போராளிகளிடமிருந்து கிடைத்துள்ளன என்றும் திரு. பாலசுப்பிரமணியம் கூறினார். [illegible]

## ஆனையிறவை படையினர் இன்று அடைந்து விடுவராம்!

### ஹமில்டனின் நம்பிக்கை இது

கொழும்பு, ஜூலை 22

வெற்றிலைக்கேணிப் பகுதியில் இருந்து முன்னேறிக் கொண்டிருக்கும் படையினர் இன்று ஆனையிறவு முகாமைச் சென்றடைந்து விடுவர்.

இவ்வாறு ஸ்ரீலங்கா இராணுவத் தளபதி ஹமில்டன் வனசிங்க கடந்த இரு தினங்களுக்கு முன்னர் கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்திருந்தார்.

வெற்றிலைக்கேணி யுத்த முனைக்கு நேரடியாக வந்து திரும்பிய கையோடு அவர் இப்படி கொழும்பில் நம்பிக்கை வெளியிட்டிருந்தார்.

இராணுவத் தளபதி கொழும்பு திரும்பிய பின்னர் முன்னேறிய படையினர் மீதே புலிகள் அதிரடித் தாக்குதல் நடத்தி அவர்களை சின்னாபின்னப்படுத்தி சிதறடித்துள்ளனர் என்பது தெரிந்ததே. (ஓ)

## படை முன்னேற முடியாத நிலை!

### ராணுவ அதிகாரி ஒப்புக்கொள்கிறார்

கொழும்பு, ஜூலை 22

ஆனையிறவு இராணுவ முகாமை நோக்கி ஸ்ரீலங்கா இராணுவத்தின் இரண்டு படையணிகளாலும் முன்னேறவே முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக கொழும்பில் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார் என இந்திய வானொலி அறிவித்தது.

அப் பகுதியில் பலமாக நிலைகொண்டுள்ள விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளின் ஆக்ரோஷத் தாக்குதல்கள் காரணமாகவே அரசுப் படையணிகளால் முன்னேற முடியாமல் உள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

## மத்திய கல்லூரி மாணவர் உதவி

யாழ்ப்பாணம், ஜூலை 22

போராளிகளுக்கு உதவுமுகமாக யாழ். மத்திய கல்லூரியிலிருந்து இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட சாக்குகளும், உரப்பைகளும் மற்றும் மண்வெட்டி உட்பட சுமார் 50 சாதனங்களும், 2 மூடை சணல் கயிறும் சேகரித்து வழங்கப்பட்டுள்ளன. [இ]

## தேடுதல் தீவிரம்

மலையகத்தில் பொலீஸார் தமது தேடுதல் பணியை தீவிரமாக்கியிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

ஹட்டன், பொகவந்தலாவ, நுவரெலியா, கினிகத்தேனை ஆகிய பகுதிகளில் பொலீஸார் அண்மையில் வீடு வீடாகத் தேடுதல் நடத்தினர். [இ-எ]

## தமிழக கடலோரப் பகுதியில் 15 படை அணிகள் ரோந்து

தமிழகக் கடலோரக் காவற் படையைச் சேர்ந்த பதினைந்து அணிகள் தமிழகக் கடலோரப் பகுதிகளில் தற்போது ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ளன.

இத்தகவலை படையின் தலைவர் திரு. கார்த்திகேயன் தெரிவித்தார்.

இப்படையில் ஒரு லட்சத்து 60 ஆயிரம் பேர் சேவை புரிகின்றனர். (இ-எ)

ராஜீவ் கொலை தொடர்பாக

## மதுரை அகதி முகாமில் இரு ஈழத் தமிழர்கள் கைது

சென்னை, ஜூலை 22

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக மதுரையில் அகதிகள் முகாம் ஒன்றில் தங்கியிருந்த இரண்டு ஈழத் தமிழர்கள் கைது செய்யப்பட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

ராஜீவ் கொலை தொடர்பாக ஏற்கனவே கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ள விஜயன் என்ற இலங்கைத் தமிழரின் உறவினர்களே அவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

ஒன்றரை வருடமாக

## சம்பளம் இன்றி தவிக்கும் லைபீரிய ராஜதந்திரிகள்

லண்டன், ஜூலை 22

கடந்த பதினெட்டு மாதங்களாகச் சம்பளமின்றி வாடும் லைபீரிய நாட்டு ராஜதந்திரிகளுக்கு நிவாரணம் வழங்க சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் முன்வந்துள்ளது.

லைபீரியா நாட்டில் உள்நாட்டுக் கலவரம் இடம்பெற்று வருவதால், லண்டன் மற்றும் மேற்கு நாடுகளில் உள்ள லைபீரிய தூதரங்களில் பணிபுரியும் சகல ராஜதந்திரிகளுக்கும் கடந்த ஆண்டு மார்ச் மாதம் தொடக்கம் லைபீரிய அரசு சம்பளம் வழங்கவில்லை.

இதனால் வீடுகளை வாடகைக்கு விட்டவர்கள், வீடுகளை விட்டு வெளியேறும்படி ராஜதந்திரிகளுக்கு நெருக்குதல் கொடுத்து வருகின்றார்கள்.

'தர்ம' உதவியில் இந்த ராஜதந்திரிகள் வாழவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாம்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இவர்களுக்கு உதவ தற்போது முன்வந்துள்ளது. [இ-எ]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 22-07-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org